بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

இஸ்லாத்தை பரப்புவதற்கு எந்த வாளின் அவசியமும் இல்லை. இஸ்லாத்தை பரப்புவதற்கு இறைவன் மீது முழுமையான, நிறைவான நம்பிக்கையுள்ள மக்களின் தேவை தான் உள்ளது. இஸ்லாத்தை பரப்புவதற்கு இறை வணக்கத்தில் உயர்வான தரத்தை அடைந்துள்ள அத்தகைய மக்களின் தேவை இருக்கின்றது. இஸ்லாத்தை பரப்புவதற்கு எத்தகைய மக்களின் தேவை இருக்கின்றது என்றால் அவர்கள் அநீதி இழைப்பதிலும், கொலை செய்வதிலும் ஈடுபடுவதற்கு பகரமாக தங்களது நஃப்ஸிற்கு எதிராக ஜிஹாது செய்தவாறு தங்களது செயல் அளவிலான நிலைமையை சரியாக வைத்திருப்பவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் ஜப்பானிலுள்ள பைத்துல் அஹது பள்ளிவாயிலில் 20.11.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

اَلَّذِیۡنَ اِنۡ مَّکَّنّٰہُمۡ فِی الۡاَرۡضِ اَقَامُوا الصَّلٰوۃَ وَاٰتَوُا الزَّکٰوۃَ وَاَمَرُوۡا بِالۡمَعۡرُوۡفِ وَنَہَوۡا عَنِ الۡمُنۡکَرِ ؕ وَلِلّٰہِ عَاقِبَۃُ الۡاُمُوۡرِ

இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அவர்களுக்கு நாம் பூமியில் வலிமையினை வழங்கினால் அவர்கள் தொழுகையினை நிலைநாட்டுவார்கள். ஸக்காத் கொடுப்பார்கள். நல்லவற்றை செய்யுமாறு ஏவு தீயவற்றை தடுப்பார்கள். எல்லா செயல்களின் முடிவும் அல்லாஹ்விடம் உள்ளது. **(22:42)**

அல்ஹம்துலில்லாஹ். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் ஜப்பானுக்கு தனது முதல் பள்ளிவாசலை கட்டுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. அல்லாஹ் இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டிருப்பதை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. நீங்கள் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கான அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பீர்களாக. ஜப்பானில் நாம் வந்ததன் நோக்கம் நிறைவேறி விட்டது என்று கூறும் அளவில் பள்ளிவாசல் கட்டுவது ஒன்றும் ஒரு பெரிய விஷயம் அல்ல.

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ள நோக்கத்தை நிறைவு செய்யும் போது தான் அந்த நோக்கம் நிறைவேறும். அந்த நோக்கமானது இறைவனுடன் நாம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். மேலும் நாம் அவனை வணங்குவதற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். இறைவனின் படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும். நாம் நமது செயல் அளவிலான நிலைமையின் பக்கம் பார்த்தவாறு அதில் உயர்வான தரத்தை பெறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் அழகிய தூதுச் செய்தியையும், அதன் அழகிய போதனையையும் இந்த சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் எட்ட வைப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். ஜப்பானுக்கு மார்க்க சுதந்திரம் கிடைத்த போது ஜப்பானியர்களுக்கு மதத்தின் பக்கம் கவனம் ஏற்பட்ட போது இஸ்லாத்தின் பக்கமும் அவர்களுக்கு கவனம் ஏற்பட்டது. இந்த விஷயம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தெரிந்த போது அவர்கள் ஜப்பானியர்கள் வரை உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தை மிகவும் வலுவாக வெளிப்படுத்தினார்கள்.

தொடர்ந்து கூறினார்கள்: மற்ற முஸ்லிம்கள் வஹியின் கதவுகளை அடைத்து தங்களது மார்க்கத்தை மரணித்துப் போன மார்க்கம் போன்று ஆக்கிவிட்டனர். இந்த விஷயத்தைக்கூறி அதாவது வஹியின் கதவுகள் அடைக்கப்பட்டது என்று கூறி மற்ற முஸ்லிம்கள் தங்கள் மீது மட்டும் அநீதி இழைக்கவில்லை. மாறாக, மற்றவர்களுக்கும் தமது கொள்கைகளையும், தமது தீய செயல்களையும் எடுத்துக் காட்டி இஸ்லாத்திற்கு வருவதிலிருந்தும் அவர்களையும் இவர்கள் தடுத்து விட்டனர். மற்ற மதங்களை அழிப்பதற்கு இவர்களிடம் என்ன ஆயுதம் இருக்கின்றது ? என்று அன்னார் மிகவும் வேதனையுடன் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் கூறினார்கள்: இந்த பணியை செய்வதற்காக இந்த ஜமாஅத்திலிருந்து சில மக்களை தயார் செய்ய வேண்டும். அவர்களிடம் இதற்கான தகுதியும், தைரியமும் இருக்க வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜப்பானியர்களுக்கு தப்லீக் செய்வதற்காக நூல்களை எழுத வேண்டும் என்ற தமது விருப்பத்தையும் தெரிவித்தார்கள். எனவே, எவ்வாறு ஹுஸூர் (அலை) அவர்கள் தமது எஜமானரான பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு பெருமானார் (ஸல்) அவர்களது தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காக வந்தார்களோ அதிலிருந்து ஜப்பானும் வெளியில் இல்லை. தீவுகளும் வெளியில் இல்லை. உலகிலுள்ள மற்ற பகுதிகளும் அதிலிருந்து வெளியில் இல்லை. உங்களுக்கு இந்த நாட்டில் வருவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருப்பது அல்லாஹ்வின் மாபெரும் அருளும் பேருபகாரமும் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்விஷயத்தில் தமது வேதனையை வெளிப்படுத்திக் கூறுகின்றார்கள். அதாவது மற்ற முஸ்லிம்கள் ஜப்பானுக்கு வந்து இஸ்லாத்தை எப்படி பரப்பப் போகின்றார்கள் ? இந்த மக்கள் இறைவனின் வார்த்தைகள் மற்றும் வஹி வருகின்ற கதவுகளை அடைத்து விட்டு இஸ்லாத்தை மரணித்துப்போன மதமாக ஆக்கிவிட்டார்கள். ஜப்பானியர்களுக்கு அல்லது உலகில் எந்தவொரு பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் அவர்களுக்கும் மரணித்துப் போன மதத்தின் தேவை என்ன இருக்கின்றது?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களால் தான் இஸ்லாம் உயிருடன் இருக்கின்றது என்பதற்கான ஆதாரத்தை தர முடியும். மேலும் இஸ்லாத்தின் சிறப்புகளை உலகிற்கு எடுத்துக் கூற முடியும். அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்வதற்கான வழியை நீங்கள் அடைத்து விட்ட பிறகு முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மதங்களை ஏற்றுக் கொள்பவர்கள் ஆகியோருக்கிடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது ? இஸ்லாத்தின் மேன்மையை உலகில் நிரூபித்துக்காட்ட வேண்டுமென்றால் இறைவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்தியே அதை உருவாக்க முடியும். எவரை இஸ்லாத்தின் அந்த இறைவன் நேசிக்கின்றானோ அவரிடம் அந்த இறைவன் இப்போது பேசுகின்றான் என்பதை எடுத்துக்கூறி தான் இஸ்லாத்தின் மேன்மை பற்றி உலகிற்கு நாம் தெரிவிக்க முடியும்.

உங்களில் ஒவ்வொருவரும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். இஸ்லாத்தை பரப்புவதற்கு எந்த வாளின் அவசியமும் இல்லை. இஸ்லாத்தை பரப்புவதற்கு இறைவன் மீது முழுமையான, நிறைவான நம்பிக்கையுள்ள மக்களின் தேவை தான் உள்ளது. இஸ்லாத்தை பரப்புவதற்கு இறை வணக்கத்தில் உயர்வான தரத்தை அடைந்துள்ள அத்தகைய மக்களின் தேவை இருக்கின்றது. இஸ்லாத்தை பரப்புவதற்கு எத்தகைய மக்களின் தேவை இருக்கின்றது என்றால் அவர்கள் அநீதி இழைப்பதிலும், கொலை செய்வதிலும் ஈடுபடுவதற்கு பகரமாக தங்களது நஃப்ஸிற்கு எதிராக ஜிஹாது செய்தவாறு தங்களது செயல் அளவிலான நிலைமையை சரியாக வைத்திருப்பவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். எங்கு அவர்கள் தங்களது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமோ அங்கு அவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் மூலமாக மற்றவர்களுக்கு தப்லீக்கும் செய்ய வேண்டும்.

எனவே, கட்டப்பட்டிருக்கின்ற இந்த பள்ளிவாசலுக்குரிய உரிமையை நீங்கள் செலுத்த வேண்டும். இந்த உரிமையை நிறைவேற்றுவதற்காக ஐந்து வேளைகளிலும் அதை நிரப்ப வேண்டும். அதற்குரிய உரிமையை செலுத்துவதற்காக உங்களது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்துங்கள். அதற்குரிய உரிமையை செலுத்துவதற்காக உங்களது செயலவிலுள்ள நிலைமைகளை ஆய்வு செய்து பாருங்கள். அதற்குரிய உரிமையை செலுத்துவதற்காக தப்லீக் களத்தில் விரிவான நிலையை ஏற்படுத்துங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: எங்கு நீங்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்த வேண்டுமோ அங்கு பள்ளிவாசலை கட்டுங்கள். அதன் மூலமாக தப்லீக்கிற்குள்ள வழிகளும், அறிமுகத்திற்கான வழிகளும் திறந்து கொண்டே செல்லும்.

எனவே இந்த பள்ளிவாசல் உங்கள் மீது இந்த பொறுப்பை சுமத்துகின்றது. எங்கு நீங்கள் இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டியது இருக்கின்றதோ அங்கு அத்துடன் தப்லீக் செய்வதற்காகவும் உங்களை நீங்கள் தயாராக வைத்திருக்க வேண்டும். இப்போது துவக்க நிகழ்ச்சிக்கு முன்னரே மீடியா பள்ளிவாசல் தொடர்பான கவரேஜை தந்துள்ளது. சமாதானத்தை விரும்பக்கூடிய முஸ்லிம்கள் என்று அறிமுகப்படுத்தியவாறு நம்மைப் பற்றி நாட்டு மக்களுக்கு அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். இப்போது இந்த அறிமுகத்திலிருந்து பலன் பெற வேண்டியது இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும். ஜப்பானியர்களுக்கு பள்ளிவாசல் புதிதான ஒன்றல்ல. இங்கு நான் ஏற்கனவே கூறியது போன்று ஏறக்குறைய நூறு பள்ளிவாசல்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது. ஆனால் நமது பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சிக்கு இந்த அளவு ஏன் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது ? ஏனென்றால், பொதுவான முஸ்லிம்களிலிருந்தும் விலகியவாறு நாம் இஸ்லாத்தின் வடிவத்தை பிறருக்கு காட்டுகின்றோம். பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிய அந்த உண்மையான வடிவத்தை நாம் காட்டுகின்றோம். இதைக் காட்டுவதற்காகவே இந்த காலத்தில் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைப் அடியாரை அனுப்பி வைத்துள்ளான். இந்த வடிவத்தை காட்டுவதற்காக உங்களுக்கும் கூட உங்களது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியது வரும்.

கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பதால் மட்டும் நீங்கள் இந்த உண்மையான வடிவத்தை பிறருக்கு காட்டி விட முடியாது. மாறாக, செயல் அளவிலான நிலைமையில் உயர்வான தரத்தை அடைவதற்கு முயற்சி செய்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருடன் அன்புடனும், நேசத்துடனும், சகோதரத்தன்மையுடனும் நடந்து கொள்வதில் முன்னேற வேண்டும். எங்கு நமது எஜமானரான பெருமானார் (ஸல்) அவர்களது பார்வை இருக்கின்றதோ, மேலும் அன்னாரது உண்மைப் பேரன்பரின் பார்வை இருக்கின்றதோ அங்கு நமது பார்வை செல்ல வேண்டும். இது பற்றிய குறிப்பு நமக்கு திருக்குர்ஆனிலும் கிடைக்கின்றது. எனவே, நாங்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு விட்டோம். அல்ஹம்துலில்லாஹ். நாங்கள் அஹ்மதிகளாக இருக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவது மட்டும் போதுமானதல்ல.

நான் ஓதிய வசனத்தில் எந்த விஷயங்களின் பக்கம் அல்லாஹ் கவனமூட்டியிருக்கின்றதோ அவை இந்த காலத்தில் அஹ்மதி முஸ்லிம்களை நோக்கியே கூறப்பட்டுள்ளன. ஏனென்றால் நாம் தான் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். நம்மிடம் தான் மார்க்கத்தை வலுப்படுத்துவதற்காக கிலாஃபத்தின் அமைப்பு தொடர்ந்து நீடித்து வருகின்றது. ஒரு அஹ்மதி முஸ்லிமிற்கு, இந்த காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்பவர்களுக்கு, கிலாஃபத்தோடு தொடர்பு இருக்கின்றது என்று வாதம் புரிகின்றவர்களுக்கு அல்லாஹ் தஆலா சில அடிப்படையான விஷயங்களை கூறியுள்ளான். ஒன்று, தொழுகைகளை நிலைநாட்டுவதன் பக்கம் அவர்களுக்கு கவனம் இருக்க வேண்டும். இது உங்களது பிறப்பின் அடிப்படை நோக்கமாகும். தொழுகைகளை நீங்கள் நிறைவேற்றாமல் இருந்தால் இறை வணக்கங்களின் பக்கம் உங்களுக்கு கவனம் இல்லாமல் இருந்தால் நாங்கள் உண்மையான முஸ்லிம்களாக இருக்கின்றோம் என்ற உங்களது வாதம் தவறானதாகும். நாங்கள் உலகில் புரட்சியை ஏற்படுத்துவோம் என்ற வாதமும் தவறானதாகும். நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்ற வாதமும் தவறானதாகும். ஏனென்றால், அடியானை இறைவனோடு இணைப்பதைத் தான் அன்னார் தமது வருகையின் நோக்கமாக கூறியுள்ளார்கள்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: எனது வருகையின் இரண்டாவது நோக்கம், பரஸ்பரம் உங்களில ஒருவர் மற்றவர்களுக்குரிய உரிமையை வழங்குவதாகும். இந்த வசனத்திலும் கூட அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். அதாவது அல்லாஹ்வின் உண்மையான அடியார்களின் சிறப்பான நற்பண்புகள் இவையாகும். அதாவது அவர்கள் இறைவனுக்கு அஞ்சுபவர்களாக இருக்கின்றனர். அவனை வணங்குவதற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக இருக்கின்றனர். தமது செல்வத்திலிருந்தும் இறைவனுக்காக மனிதர்களின் நலனுக்காகவும், மேன்மைக்காகவும் செலவு செய்யக்கூடியவர்களாக அவர்கள் இருக்கின்றனர். தமது வாழ்வில் மட்டும் அவர்கள் இந்த புரட்சியை ஏற்படுத்தவில்லை. அதாவது இறையச்சத்தை மேற்கொண்டவாறு மட்டும் அவர்கள் தங்களது வாழ்வை கழிக்கவில்லை. மாறாக, தங்களது முன்மாதிரியை காட்டியவாறு மற்றவர்களையும் தங்களோடு அவர்கள் இணைத்துக் கொள்கின்றனர். அவர்களுக்கும் வாழ்வின் அசல் நோக்கம் என்ன? என்பதைப் பற்றி கூறுகின்றனர். ஷய்த்தானிடமிருந்து எப்படி தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு கூறுகின்றனர்.

நம்மீது அல்லாஹ் இந்த பேரருளை செய்துள்ளான். ஆனால் மற்ற முஸ்லிம்களோ பிரிந்து சிதறுண்டு கிடக்கின்றனர். ஒரு கையின் கீழ் வருமாறு அழைக்கின்ற எந்தக் குரலையும் அவர்களால் கேட்க முடியவில்லை. நமக்கு அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவாறு அன்னாருக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவே நீடித்திருக்கின்ற கிலாஃபத் அமைப்பின் மூலமாக நமக்கு அந்த வலிமையை வழங்கியுள்ளான். அதாவது நாம் கிலாஃபத்தின் ஓர் குரலை செவிமடுத்தவாறு எழுகின்றோம். அதன் ஓர் குரலுக்கு கட்டுப்பட்டவாறு அமர்கின்றோம். வலிமை ஆட்சி கிடைப்பதனால் மட்டும் ஏற்படுவதில்லை. மாறாக, ஓர் திகில் வெளிப்படுவதன் மூலமாக கூட அது ஏற்படுகின்றது. உள்ளங்களில் அமைதி ஏற்படுவதன் மூலமாகவும் அது வெளிப்படுகின்றது. இன்ஷா அல்லாஹ் தஆலா அந்த காலமும் வரும். அப்போது அரசாங்கங்கள் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது அடிமைகளாக மாறி உண்மையான இஸ்லாத்தை புரிந்து கொள்ளக்கூடியதாக ஆகிவிடும். ஆனால், இந்த சமயத்தில் கூட உலகம் நம் பக்கம் பார்க்க ஆரம்பித்து விட்டது. நம்மிடம் இஸ்லாத்தின் சரியான போதனையை கூறுங்கள் என்று அது கூறுகின்றது. எனவே, இதுவும் கூட ஒரு வலிமையும், திகிலும் ஆகும். இந்த வலிமையையும் திகிலையும் அல்லாஹ் உலகில் ஏற்படுத்தியுள்ளான். ஆனால் எவர்கள் இறைவன் கூறுகின்ற இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துகின்றனரோ அவர்களே இதிலிருந்து பலனை பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ் தஆலா கூறுகின்றான். இந்த அருளுக்கு நீங்கள் வாரிசாக ஆவதற்கு நன்மைகளில் நிலைத்திருங்கள். அதை பரப்புங்கள். தீமைகளிலிருந்து தவிர்ந்திருங்கள். மற்றவர்களையும் அதிலிருந்து காப்பாற்றுங்கள். எனவே எதுவரை நீங்கள் இதில் நிலைத்திருப்பீர்களோ, இந்த அடிப்படையான விஷயங்களை பற்றிப் பிடித்திருப்பீர்களோ அதுவரை நீங்கள் முன்னேறிக் கொண்டே செல்வீர்கள்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதிக்கும் எப்போதும் இந்த விஷயத்தை நினைவில் வைத்திருக்க வேண்டியது அவசியமானதாகும். அதாவது அவர்கள் தங்களது நற்செயல்களில் முன்னேறுவதன் பக்கம் கவனம் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் உலகத்தையும் அவர்களின் பக்கம் அவர்களால் கவனம் செலுத்த வைக்க முடியும். இந்த விஷயமே அத்தகையதொரு வலிமைக்கும் காரணமாக அமையும். அப்போது அரசாங்கங்கள் கூட இந்த உண்மையான போதனைகளுக்கு கட்டுப்பட்டு நடந்தவாறு ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களது அடிமைகளாக இருப்பதை ஏற்றுக் கொள்ளும். எனவே, இந்த மகத்தான நோக்கத்தை பெற வேண்டும் என்ற நற்செய்தியை அல்லாஹ் உண்மையான முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளான். ஆனால், அநீதி இழைப்பவர்களாக இல்லாமல் இருக்கும் அத்தகைய முஸ்லிம்களுக்கே இந்த நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. உங்களது படைப்பின் நோக்கத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்களது மனதின் சொந்த விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு பகரமாக இறைவனது திருப்தியை பெற நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்ளுங்கள். மேலும் இந்த அன்பையும் நேசத்தையும் இந்த சமுதாயத்திலும் பரப்பி விடுங்கள். இறைவன் விரும்புகின்ற அந்த சிறப்பான நற்பண்புகளை நீங்கள் உங்களிடம் உருவாக்குங்கள். பள்ளிவாசலை கட்டியதனால் மட்டும் அந்த சிறப்பான நற்பண்புகள் உங்களிடம் உருவாகி விட முடியாது. மாறாக, இதற்காக நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அந்த சிறப்பான நற்பண்புகளை பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்.

அதாவது ஒரு மனிதன் உண்மையான நம்பிக்கை கொண்டவராக ஆவதற்கு முதல் நிபந்தனை அவர் பாவமன்னிப்பு கோர வேண்டும் என்பதாகும். அதாவது தனது பாவங்களை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொண்டவாறு முழுமையான முறையில் அவற்றிலிருந்து தப்பிப்பதற்கு உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். பாவம் என்பது பெரும் பெரும் பாவங்களை மட்டும் குறிக்காது. மாறாக, ஜமாஅத் அமைப்பில் தீயதை ஏற்படுத்துகின்ற சிறு சிறு தவறுகள் கூட பாவமாகி விடுகின்றது. ஆனால் இந்த உறுதிமொழியில் நீங்கள் நிலைத்திருந்தால் பிறகு இறைவனை வணங்குவதற்குரிய உரிமையை செலுத்தியவாறு அவனை வணங்குவது ஒரு கடமையாக இருக்கின்றது. அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப செயல்படுவது ஒரு நம்பிக்கை கொண்டவரின் கடமையாகும்.

இதைப்பற்றி அல்லாஹ் வமா கலகதுல் ஜின்ன வ இன்ஸ இல்லா லியஃபுதூன் அதாவது ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக மட்டுமே படைத்துள்ளேன் என்று கூறுகின்றான் (51:57).

அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக மிகுந்த பணிவுடன் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்தவாறு அவனது விருப்பத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வின் முன்னிலையில் உங்களிடம் இருக்கின்ற அனைத்தையும் தியாகம் செய்தவாறு உங்களது சுய விருப்பத்தை விட்டுவிட்டு, உங்களது கண்ணியத்தை மறந்து விட்டு, உங்களது மதிப்பையும், மரியாதையும் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டு அவனது கட்டளைகளுக்கு ஏற்ப செயல்பட்டவாறு ஜமாஅத் அமைப்பிற்கு

கட்டுப்பட்டு நடப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஜமாஅத் அமைப்பிற்கும் கூட ஏன் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றால் அதுவும் கூட அல்லாஹ் கூறியுள்ள கட்டளையே ஆகும். இதுவும் கூட அல்லாஹ்வின் நெருக்கத்தை நமக்கு பெற்றுத் தருகின்றது.

எனவே, ஸஜ்தாக்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்காக இருக்கின்றன. மனிதனிடம் பணிவு ஏற்படும் போது தான் அத்தகைய ஸஜ்தாக்கள் உருவாகின்றன. எனவே, இத்தகைய ஸஜ்தாக்களை நான் தேட வேண்டும். இத்தகைய பணிவான ஸஜ்தாக்களை செய்வதற்கான நல்வாய்ப்பு நமக்கு கிடைக்கின்ற போது இறைவனது நெருக்கத்தை பெறுவதற்காக மிக அதிகமாக நாம் முயற்சி செய்தவாறு அதன் பக்கம் நமக்கு கவனம் ஏற்படும் போது பிறகு அதற்காக உங்களது முழு ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு மற்றவர்களுக்கும் நன்மைகளை பற்றி போதனை செய்து அவர்களையும் இறைவனுக்கு அருகில் கொண்டு வாருங்கள். பிறகு தப்லீக்கின் பக்கம் கவனம் செலுத்துங்கள். உலகில் மூழ்கிக் கொண்டிருக்கின்ற மற்றவர்களையும் இறைவனுக்கு முன்னால் குனிபவர்களாக மாற்றுங்கள். மற்றவர்களையும் கூட அவர்கள் பாவங்களில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றுங்கள். நெருப்பிலிருந்து அவர்களை காப்பாற்றுங்கள். இன்று ஒவ்வொரு அஹ்மதியின் பணியும் இதுவேயாகும். இதுவே நமது பொறுப்பும் ஆகும். அதாவது உலகத்தை இறைவனின் வெறுப்பிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். பிறகு இதனையும் நினைவில் கொள்ளுங்கள். இதற்கு முன்னரும் இதைப் பற்றி நான் கூறி வந்துள்ளேன். இங்கு அல்லாஹ் கூறுகின்றான். உண்மையான நம்பிக்கை கொண்டவர் அல்லாஹ்வின் வரம்புகளை பாதுகாக்கக் கூடியவர்களாக இருப்பர். எனவே அந்த விஷயங்களின் மீது உங்களது பார்வையை செலுத்தியவாறு அவற்றை பாதுகாத்து வாருங்கள். அதாவது அல்லாஹ் கூறியுள்ள விஷயங்களை முழுமையாக பேணி நடப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அவை திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அந்த விஷயங்களை பாதுகாப்பதும் உங்களது பணியாகும். அல்லாஹ்வும், அவனது தூதரும் கூறியுள்ள அந்த விஷயங்களை பாதுகாக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள அந்த விஷயங்களின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். அவற்றை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் ஜமாஅத்தின் மீது வைத்துள்ள எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுங்கள். அந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். காலலத்தின் கலீஃபா கூறுகின்ற அந்த விஷயங்களை கேளுங்கள். அவற்றிற்கேற்ப செயல்பட முயற்சி செய்யுங்கள். உங்களது ஈமானையும் உங்களது செயலையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இந்த காலத்தில் அல்லாஹ் கிலாஃபத்தின் அருட்கொடையின் மூலமாக நமக்கு சிறப்பை வழங்கியுள்ளான். அதற்கு கண்ணியமளியுங்கள். அல்லாஹ் தஆலா மார்க்கத்தின் வலிமைக்கு இதனை ஒரு கட்டாயமான அம்சமாக ஆக்கியுள்ளான். பிறகு இத்தகைய நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவன் நற்செய்தி வழங்கியுள்ளான். அவர்கள் இந்த எல்லா விஷயங்களுக்கும் ஏற்ப செயல்படக் கூடியவர்களாக இருக்கின்றனர். எனவே, உங்களை நீங்களே ஆய்வு செய்து பாருங்கள். உண்மையான முஃமினாக இருப்பதற்கான நற்செய்தியை அல்லாஹ் எவர்களுக்கு வழங்கியுள்ளானோ அவர்களில் ஒருவராக நீங்கள் ஆகிவிடுங்கள். இந்த காலத்திலுள்ள கண்டுபிடிப்புகளையும் கூட நமக்கு கீழ் கொண்டு வந்திருப்பது கூட அல்லாஹ் நம்மீது செய்துள்ள பேருபகாரமாகும். ஜமாஅத் ஒவ்வொரு வருடமும் ஜமாஅத் M.T.A விற்காக லட்சக்கணக்கான டாலர்களை செலவு செய்கின்றது. இது தப்லீக் மற்றும் தர்பிய்யத்திற்கான மிகச் சிறந்த வழியாகும். எல்லாவற்றையும் விட காலத்தின் கலீஃபாவுடன் தொடர்பு கொள்வதற்கான ஊடகமாக இது விளங்குகின்றது.

அஹ்மதி அல்லாத மற்றவர்களும் கூட சில நேரங்களில் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். உங்களது குத்பா அல்லது இந்த நிகழ்ச்சியை கேட்டு மார்க்கத்தின் உண்மையை நாங்கள் புரிந்து கொண்டோம் என எழுதுகின்றனர். எனவே, அஹ்மதிகளுக்கு மார்க்கத்தை கற்றுக் கொள்வதற்கும், அவர்களின் சீர்திருத்ததத்திற்கும், அவர்களிடம் ஒற்றுமை ஏற்படுவதற்கும், அவர்கள் தங்களை காலத்தில் கலீஃபா பங்குபெறும் நிகழ்ச்சிகளுடன் இணைத்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

ஜப்பானிய அஹ்மதிகளிடமும் நான் கூறிக் கொள்கின்றேன். நீங்கள் மார்க்கத்தை கற்றுக் கொள்ள வேண்டும். உங்களது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேறி செல்லுங்கள். இந்த பழைய அஹ்மதி அல்லது இந்த நபர் எப்படிப்பட்டவர் என்று பார்க்க வேண்டாம். அவர் மார்க்க விவகாரத்தில் பலகீனமானவராக இருந்தால் நீங்கள் அவருக்கு நேர்வழி கிடைப்பதற்கான காரணமாக ஆகிவிடுங்கள். இதற்கு முன்னரும் நான் பலமுறை கூறி வந்துள்ளேன். இறைவன் யாருக்கும் உறவினர் அல்ல. எவர் நற்செயல்களை செய்வாரோ தனது இறைவணக்கத்தின் தரத்தினை உயர்த்துவாரோ அப்படிப்பட்டவருக்கு அல்லாஹ்வின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். இந்த அடிப்படையான விஷயத்தை கண்முன் நிறுத்தியவாறு ஒவ்வொரு அஹ்மதியும் செயல்படுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக. இவ்விஷயங்களுக்கேற்ப தமது வாழ்வை கழிப்பதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. இந்த பள்ளிவாசல் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானிலும் அவரது செயல் நிலைமையிலும் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கட்டுமாக. தற்காலிக உணர்வு மற்றும் ஆர்வத்தின் காரணமாக பள்ளிவாசல்களை அவர்கள் கட்டுபவர்களாக அவர்கள் இருக்கக்கூடாது. மாறாக, உண்மையிலேயே அதற்கான உரிமையை செலுத்துபவர்களாக அவர்கள் திகழ வேண்டும்.

பள்ளிவாசலைப் பற்றிய சில விவரங்களை உங்களுக்கு கூறுகின்றேன். பள்ளிவாசலிலுள்ள இந்த நிலத்தின் மொத்த பரப்பளவு ஓராயிரம் சதுர அடியாகும். பள்ளிவாசல் கீழ்த்தளமும் முதல் மாடியும் கொண்டதாகும். இந்த சாலை இப்பகுதியிலுள்ள அனைத்து சாலைகளையும் ஒருங்கினைக்கக் கூடியதாக இருக்கின்றது. High Way இருக்கின்ற இடத்திற்கு மிகவும் அருகில் இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், இரண்டு High Way க்கள் இதனையொட்டி செல்கின்றன. அருகிலேயே ரயில் நிலையமும் உள்ளது. இந்த ரயில் நிலையத்திலிருந்து Nagoya வின் International AirPort ற்கு ரயில் வசதி இருக்கின்றது. இவ்வகையிலும் பெரும் அளவிளான வசதிகள் இதன் மூலம் இருக்கின்றது. பள்ளிவாசலுக்கு பைத்துல் அஹது என நான் பெயர் வைத்துள்ளேன். இங்கு

பரக்கத்திற்காக காதியானிலுள்ள தாருல் மஸீஹ் மற்றும் மஸ்ஜிது முபாரக்கிலுள்ள செங்கல்களும் பொருத்தப்பட்டுள்ளன. கட்டடத்தின் கீழ்தளத்தில் பள்ளிவாசலின் Main Hall இருக்கின்றது. 500 பேர் இந்த Hall ல் தொழலாம். முதல் மாடி கட்டடதத்தில் லஜ்னா ஹால் இருக்கின்றது. இதற்கு மேல் உள்ள மொட்டை மாடியில் ஒரு கூடாரத்தை ஏற்படுத்தியவாறு நிகழ்ச்சிகளையும் நடத்திக் கொள்ளலாம். அந்த இடத்தையும் சேர்த்துக் கொண்டால் 700 அல்லது 800 நபர்கள் தொழுவதற்கான இடம் இருக்கின்றது. முதல் தளத்தில் அலுவலகமும், சிறிய நூலகம் ஒன்றும் உள்ளது. அங்கு லஜ்னா ஹாலும், முரப்பி தங்குமிடமும், விருந்தினர் இல்லமும் உள்ளது. இது கட்டடமாக வாங்கப்பட்டு பிறகு அது பள்ளிவாசலாக மாற்றப்பட்டிருப்பதால் இதன் நான்கு மூளைகளிலும் பள்ளிவாசலின் வடிவத்தை வழங்கும் வகையில் மினாராவும் கட்டப்பட்டுள்ளது. கலசமும் உள்ளது. அது மெயின் ரோட்டில் இருப்பதன் காரணமாக மக்களது கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் அது அமைந்துள்ளது. இந்த பள்ளிவாசல் ஜப்பானில் மட்டுமல்லாமல் ஆசியாவின் தூர கிழக்கு பகுதியிலுள்ள நாடுகளான சீனா, கொரியா, தைவான், தாய்லாந்து ஆகியவற்றின் நமது முதல் பள்ளிவாசலாகும்.

அல்லாஹ் இந்த பள்ளிவாசலை பிற இடங்களிலும் பள்ளிவாசலை கட்டுவதற்கான ஒரு வழியாக ஆக்குவானாக. அங்கும் ஜமாஅத்துகள் முன்னேற்றமடைந்து அவர்களும் பள்ளிவாசல்களை கட்டுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. நான் ஏற்கனவே கூறியிருந்தது போன்று இது கட்டடமாக வாங்கப்பட்டு பிறகு அது பள்ளிவாசலாக மாற்றப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த கட்டடம் வாங்கப்பட்டது. இந்த கட்டடத்தை வாங்குவதற்காகவும், பள்ளிவாசலை கட்டுவதற்காகவும் ஏறக்குறைய 13 கோடி 70 லட்சம் எண் செலவாகியுள்ளது. இது ஏறக்குறைய 12 லட்சம் டாலர்கள் ஆகும். இந்த தொகையில் பாதியை தலைமையகம் கிராண்ட்டாக வழங்கியுள்ளது. இதுவே நாம் அவர்களுக்கு செய்த உதவியாகும். இங்கு சிறிய ஜமாஅத்தே இருக்கின்றது. மிகவும் தியாகம் செய்தவாறு இந்த பள்ளிவாசலுக்காக இவர்கள் தங்களது பங்கையும் செலுத்தியுள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக.

பள்ளிவாசலுக்காக பொருள் தியாகங்கள் செய்யப்பட்டது தொடர்பாக பல சம்பவங்களும் உள்ளன. செகரட்டரி மால் இந்த பள்ளிவாசலை கட்டுவதற்காக ஒரு அஹ்மதி சகோதரரிடம் பொருள் தியாகம் செய்யுமாறு கூறிய போது, அந்த அஹ்மதி செகரட்டரி மால் அவர்களை தன்னுடன் அழைத்துச் சென்றார். என்னிடம் எது இருக்கின்றதோ அதை இதற்காக தந்து விடுகின்றேன் என்று கூறினார். இந்த சகோதரரின் மனைவி ஜப்பானியர் ஆவார். அங்கு சென்று சந்தா பற்றி கூறப்பட்டதும் அவரது மனைவி பல டப்பாக்களை கொண்டு வந்து அங்கு வைத்தார். அவற்றிலிருந்து தொகையை வெளியே எடுத்த போது இந்த எல்லா பொருள்களும் ஏறக்குறைய மொத்தம் 10,000 டாலர் பெருமானதுள்ள பொருள்களாக இருந்தது.

இவ்வாறே ஜப்பான் ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: சில சகோதரர்களின் நிலைமை பற்றி எனக்கு நன்றாக தெரியும். செழிப்பான நிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் தங்களது செலவீனங்களை குறைத்துக் கொண்டு அல்லாஹ்வின் பள்ளிவாசலை கட்டுவதற்காக பொருள் தியாகம் செய்யும் நற்பாக்கியத்தை பெற்றுள்ளனர். இறுதியில் இவர்கள் தொகையை ஒன்று சேர்த்து கொடுத்த பிறகும் கூட 2 அல்லது இரண்டரை லட்சம் டாலர்கள் மேலும் தேவைப்பட்டது. ஆனால் அனைத்து ஜமாஅத் சகோதரர்களும் தங்களை கஷ்டத்தில் ஆழ்த்திக் கொண்டவாறு இந்த தொகையை கொடுத்து முடித்தனர். எவர்கள் முதலில் இதற்காக பொருள் தியாகம் செய்தனரோ அவர்கள் மீண்டும் இதற்காக முழுமையாக முயச்சி செய்து தொகையை வழங்கியவாறு அவர்களிடம் என்ன இருந்ததோ அதைக் கொண்டு வந்து கொடுத்தனர். இவ்வாறு இதற்காக 7 லட்சம் டாலர் ஒன்றுதிரப்பட்டது.

ஒரு மாணவர் படித்துக் கொண்டே Part Time Job செய்து வந்தார். அவரது சம்பளமாக 80,000 எண் கிடைத்து வந்தது. அதிலிருந்து ஒவ்வொரு மாதமும் 50,000 எண் அவர் பள்ளிவாசலுக்காக கொடுப்பதற்கான நல்வாய்ப்பை பெற்று வருகின்றார். அஹ்மதி சிறுவர்களும் கூட இதற்காக பெரும் தியாகங்களை செய்துள்ளனர். தங்களது Pocket Money லிருந்து பள்ளிவாசலுக்காக சந்தா கொடுத்து வந்தனர். இவர்களில் எல்லாரையும் விட அதிகமாக ஒரு சிறுமி தியாகம் செய்துள்ளார். பெரியவர்களிடமிருந்து பல்வேறு கரன்ஸிகளாக பல்வேறு சமயங்களில் அவர் அவருக்கு கிடைத்த அந்த அன்பளிப்புகளை எல்லாம் அவர் இதற்காக கொடுத்து வந்தார். இவ்வாறு அவர் சேர்த்து வைத்த மொத்தம் 9000 டாலர்களையும் அவர் இதற்காக வழங்கி விட்டார்.

அஹ்மதி பெண்களும் இதற்காக அதிகமாக தியாகம் செய்துள்ளனர். சிலர் இதற்காக தங்களது நகைகளை இதற்காக அர்ப்பணித்துள்ளனர். ஒரு பெண் தன்னிடமிருந்த 24 வளையல்களை இதற்காக கொடுத்துள்ளார். இன்னொரு பெண் தனது தாயார் தனக்கு வழங்கிய அனைத்து நகைகளையும் பள்ளிவாலுக்காக கொடுத்து விட்டார். இன்னொரு பெண் பாகிஸ்தாலிருந்து இப்போது தான் இங்கு வந்தார். அவர் தனக்கு கிடைத்த நகையின் ஒரு புதிய செட்டை பள்ளிவாசலுக்காக கொடுத்து விட்டார். அதனை கடந்த ஜனவரி மாதம் தான் தனது மகளின் திருமணத்திற்காக அவர் வாங்கி இருந்தார். அல்லாஹ் இவ்வாறு தியாகம் செய்துள்ள அனைவருக்கும் தன் தரப்பிலிருந்து அதிகமான அருட்கொடைகளை வழங்குவானாக. அவர்களது செல்வத்தில் பரக்கத்தை வழங்குவானாக. அவர்களது உயிர்களில் பரக்கத்தை வழங்குவானாக. ஈமானில் வளர்ச்சியடையச் செய்வானாக. இவர்கள் அனைவரையும் இந்த பள்ளிவாசலுக்குரிய உரிமையை செலுத்தக்கூடியவர்களாக அவன் ஆக்குவானாக. இந்த பள்ளிவாசல் எங்கு இவர்களது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்தக்கூடியதாக இருக்குமோ அத்துடன் பரஸ்பரம் இவர்களில் ஒருவர் மற்றவரை நேசிக்கக் கூடியவர்களாகவும் அது அவர்களை ஆக்கட்டும். இந்த அன்பையும் நேசத்தையும் பார்க்கின்ற மற்றவர்களுக்கு இதனால் இந்த பள்ளிவாசலின் பக்கம் கவனம் திரும்பட்டும். பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள ஜமாஅத்தை சாராத நமது அண்டை வீட்டுக்காரர்களும் கூட மிகவும் அதிகமாக தங்களது அன்பையும் நேசத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரு ஜப்பானிய நண்பருக்கு பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளிலிருந்தும் கூட அதிகமான எண்ணிக்கையில் விருந்தினர்கள் வருகின்றனர் என்பது தெரிய வந்த போது அவர் மூன்று மாடி கட்டிடமுள்ள தமது வீட்டை ஜமாஅத்திற்கு தந்து விட்டார். அதாவது விருந்தினர்களை அந்த வீட்டில் தங்க வைக்கும்படி கூறியுள்ளார். பள்ளிவாலுக்கு அருகில் உள்ளவர்களுக்கு அதிகமாக விருந்தினர்கள் வருவார்கள் என்பது தெரிய வந்த போது ஜமாஅத்திற்காக Parking ற்காக வைத்துள்ள இடத்தை அவர்கள் வழங்கினர். கார்களை அங்கு பார்க்கிங் செய்ய முடியும். ஜப்பானியர்கள் பொதுவாக புதிய கட்டடம் கட்டப்படும் போது அதன் துவக்க நிகழ்ச்சியை பூக்களால் அலங்கரிப்பது அவர்களது வழக்கமாகும். ஜப்பானில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சி நடக்கப் போகின்றது என்பதைப் பற்றி இரண்டு ஜப்பானிய நண்பர்களுக்கு தெரிய வந்த போது துவக்க நிகழ்ச்சியின் போது நாங்கள் பள்ளிவாசலை பூக்களால் அலங்கரிக்க விரும்புகின்றோம் என்று அவர்கள் கூறினர். பிறகு அதற்காக அவர்கள் முழுமையாக உதவியும் செய்தனர்.

பள்ளிவாசல் Registration செய்யப்படுவதில் அஹ்மதி அல்லாத ஒரு முஸ்லிம் வழக்கறிஞரின் உதவியும் நமக்கு கிடைத்தது. அதைப்பற்றி நான் கூற விரும்புகின்றேன். இவர்கள் பெரும் பணியை செய்துள்ளார்கள். சட்ட ரீதியாக தேவைப்படும் உதவிகளை அவர்கள் செய்து வந்தார்கள். இவரது பெயர் அக்கியூன் நஜீபா சாஹிப். மிகவும் சிறந்த முறையில் தன்னலம் பார்க்காமல் இவ்விஷயத்தில் இவர் நமக்கு ஒத்துழைப்பு தந்துள்ளார். இந்த பணிக்காக அவர் வாங்குகின்ற ஃபீஸ் தொகை ஏறக்குறைய 20,000 டாலர்களாகும். ஆனால் இவர் இவ்வாறு கூறுகின்றார். ஜப்பான் மீது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பேருபகாரங்கள் உள்ளன. அதற்கு பகரமாக எவ்வித கூலியையும் பெறாமல் நான் இந்த பணியை செய்வேன் என்று அவர் கூறுகின்றார். எனவே இதற்கான எந்த ஃபீஸையும் அவர் வாங்கவில்லை.

நான் ஆரம்பத்தில் கூறியிருந்தது போன்றே, பத்திரிகைகளிலும், மீடியாக்களிலும் பள்ளிவாசல் பற்றிய செய்திகள் வந்துள்ளன. எல்லா பெரிய பத்திரிகைகளிலும், புகழ்பெற்ற T.V சேனல்களிலும் பள்ளிவாசல் பற்றிய செய்தியும், ஜமாஅத்தைப் பற்றிய அறிமுக செய்தியும் வந்துள்ளது.

அமைதி நிறைந்த. சமுதாயத்தில் சமாதானத்தை பரப்புகின்ற இஸ்லாத்தின் பிரதிநிதிகளாக இவர்கள் உள்ளனர் என்று அவர்கள் எழுதியுள்ளனர். இவர்கள் பொதுத் தொண்டுகளை செய்து வருகின்றனர் என்று அவர்கள் எழுதியுள்ளனர். இந்த தாக்கத்தை நிலைநிறுத்துவதும், இந்த தாக்கத்தை மேலும் அதிகமாக்குவதும் இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியின் பணியாக இருக்கின்றது. அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இந்த உண்மையை ஒவ்வொரு அஹ்மதியும் பரப்பக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதாவது இஸ்லாம் அன்பு மற்றும் சமாதானத்தை வழங்குகின்ற மார்க்கமாகும் என்ற தூதுச் செய்தியை நீங்கள் பரப்ப வேண்டும். நமது பள்ளிவாசல்கள் இதற்கான சின்னமாக திகழ்கின்றன. இதன் மூலமாக இந்த சமுதாயத்தில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் பரவுவதற்கான வழி விரிவானதாக ஆகிக் கொண்டே செல்ல வேண்டும். இந்த சமுதாயமும் தன்னைப் படைத்தவனை அறிந்து கொள்கின்ற நற்பாக்கியம் பெற்ற சமுதாயமாக ஆக வேண்டும். மனித சமுதாயத்திற்கு பேருபகாரம் செய்பவராக வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்த்தை புரியக் கூடியவர்களாக அவர்கள் ஆக வேண்டும்.


Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Ahad,Japan – on 20.11.2015
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516